Government Hospital at Chingleput.

* 604 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have issued orders for opening additional Women and Children Wing in Government Hospital at Chingleput District; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அண்டு (இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 6 லட்ச ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட தாய் சேய் மருத்துவப் பகுதி ஒன்றைக் கட்டுவதற்காக, அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். டென்னிஸ் : எப்பொழுது கட்டடம் ஆரம்பிக்கப் படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கட்டடம் கட்டுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது. அதற்கான இடமும் தேர்ந் தெடுக்கப்பட்டுவிட்டது. விரைவில் கட்டத் துவங்குவார்கள்.

கண் மருத்துவ முகாம்கள்.

* 605 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடமாடும் இலவசக் "கண் வைத்திய முகாம் களை" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவினுல் ஆண்டு ஒன்றுக்கு 24 இலவச கண் வைத்திய முகாம்களை செயல்படுத்த தேவையான ஆணையை அரசு பிறப்பித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இலவச கண் சிகிச்சை முகாமை இதர மாவட்டங்களுக்கும் விரிவு படுத்த உத்தேசம் உண்டா?